## செய்தி வெளியீடு

**செ.வெ. எண். 12** **நாள். 12.12.2017**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி முறையில் (Randomization) முதற்கட்ட வரிசைப்படுத்தும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி முறையில் (Randomization) முதற்கட்ட வரிசைப்படுத்தும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொதுப்பார்வையாளர் செல்வி அல்கா ஸ்ரீவஸ்தவா, இ.ஆ.ப., மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் இன்று (12.12.2017) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

எண்.11, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் 59 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இத்தேர்தலில் 50 இடங்களில் 256 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலையில் 2 துணை வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு, தற்பொழுது 258 வாக்குச்சாவடி மையங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (1400 வாக்காளர்களுக்கு மேலுள்ள மைய எண்–52 மற்றும் 236 ஆகிய வாக்குப்பதிவு மையங்கள் ஆண், பெண் வாக்குச்சாவடி மையங்களாக இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது). டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில் 1,10,903 ஆண் வாக்காளர்களும், 1,17,232 பெண் வாக்காளர்களும், 99 இதர வாக்காளர்கள் என மொத்தம் 2,28,234 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

மேலும், ஒரு வாக்குச்சாவடிக்கு 1 கட்டுப்பாட்டு கருவி, 4 வாக்குப்பதிவு இயந்திரம், 1 ஒப்புகைச் சீட்டு பார்க்கும் இயந்திரம் பயன்படுத்தப்படவுள்ளது. 15 சதவீதம் இருப்பில் (15% Reserve) கட்டுப்பாட்டு இயந்திரங்கள்–297ம், வாக்குப்பதிவு இயந்திரங்கள்–1187ம், 25 சதவீதம் இருப்புடன் (25% Reserve) 323 (VVPAT) ஒப்புகைச் சீட்டு பார்க்கும் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட உள்ளது. வாக்குப்பதிவின் போது பயன்படுத்தப்பட உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான முதற்கட்ட வரிசைப்படுத்துதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஆர்.முத்துகுமாரசாமி மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**